2017 ஜூன் 29] [திரு. எம்.சி. சம்பத்]

ஒரு பொதுவான முடிவை எடுத்துள்ளது. மத்திய அரசின் திட்டக் குழு NITI Aayog, இந்நிறுவனம் பொதுத் துறை மற்றும் தனியார் துறையுடன் இணைந்து, PPP–Public Private Partnership என்ற முறையில் செயல்படலாமா என்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, அறிக்கை அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி துப்பாக்கி தொழிற்சாலை நிருவாகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அங்கு பணிபுரியும் பணியாளர்கள் 27–6–2016 அன்று தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதை மாநில அரசு நன்கறியும். இந்நிறுவனம் இலாபத்தில் இயங்குகின்ற நிறுவனம். மத்திய பாதுகாப்புத் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்ற நிறுவனமாக இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பாரதப் பிரதமர் அவர்களுக்கு சரியான அழுத்தத்தினைக் கொடுத்து இந்தத் தொழிற்சாலை இங்கேயே தொடர்ந்து செயல்படுவதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

(ஆ) எண்ணூர் காமராஜர் துறைமுகம், தனியாருக்கு விற்பனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ். சுதர்சனம், இன்று காலையில் ஓர் அறிவிப்பு கொடுத்தீர்கள். தகவல் கோரல் என்ற முறையில் அதை அனுமதிக்கிறேன். என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். இந்த அரசின் கவனத்தை ஈர்க்க, விளக்கத்தைக் கோர இந்தத் தீர்மானத்தை நான் படிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானம் இல்லை. தகவல் கோரல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அவ்வளவுதான்.*

திரு. எஸ். சுதர்சனம்: *1–2–2001 அன்று கடந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களால் தொடங்கப்பட்ட எண்ணூர் காமராஜர்*

[திரு. எஸ். சுதர்சனம்] [2017 ஜுன் 29

துறைமுகத்தை தனியாருக்கு விற்பனை செய்ய மத்திய அரசினுடைய செயலாளர்கள் குழு அனுமதி அளித்துவிட்டது என்றும், மிக விரைவிலே மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்க இருப்பதாகவும் தகவல் வருகிறது. இந்தத் துறைமுகம் 3,100 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. இதனுடைய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் விரிவாகச் சொல்ல வேண்டாம். அது என்னவென்று சொன்னால் போதுமானது.

திரு. எஸ். சுதர்சனம்: இல்லை, இல்லை, அதனுடைய அருமை, பெருமைகளைச் சொல்ல வேண்டும் அல்லவா? எவ்வளவு சிறப்பாக இயங்குகிறது என்பதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதைக் கேளுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: இன்னும் சில நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். என்னென்னவெல்லாம் நடக்கிறது என்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்வதைக் கேளுங்கள். திரு. சுதர்சனம் காலையிலேயே உங்களிடம் நான் சொல்லிவிட்டேன். இப்பொழுதுதான் கொடுத்துள்ளீர்கள். இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவரும் கொடுத்திருப்பதால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் brief ஆக பதில் சொல்லுமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள், தகவல் கோரல் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவ்வளவுதான். விரிவாகச் சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது அல்லவா? திடீரென்று கொடுத்துள்ளீர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: இந்தத் துறைமுகம் 3,100 ஏக்கர் நிலத்திலே அமைந்துள்ளது. இதன் மதிப்பு 15,000 கோடி ரூபாய் ஆகும். இந்தத் துறைமுகத்தின் மூலதனத்தில் 68 சதவிகிதம் மத்திய அரசின் பங்கும், 32 சதவிகிதம் சென்னை துறைமுகத்தின் பங்கும் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதமாக நான் அனுமதித்திருந்தால் அதையெல்லாம் நீங்கள் detail-ஆக சொல்லலாம். நீங்கள் என்னவென்று விவரத்தைக் கேட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான பதிலைச் சொல்வார்கள்.

2017 ஜூன் 29]

திரு. எஸ். சுதர்சனம்: *இந்தத் துறைமுகத்தை மத்திய அரசு தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது மட்டுமல்ல, இந்தத் துறைமுகம் 480 கோடி ரூபாய் நிகராக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) போதும், போதும், உட்காருங்கள் நீங்கள். திரு. ராஜா, திரு. வேலு, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள காமராஜர் துறைமுகம், முந்தைய எண்ணூர் துறைமுகம் மத்திய அரசின் மணி ரத்னா அந்தஸ்து பெற்ற ஒரு பொதுத் துறை நிறுவனமாகும். இப்பொருள் சம்பந்தமாக காமராஜர் துறைமுக நிருவாகத்திடமிருந்தும், மத்திய அரசின் கப்பல் போக்குவரத்து துறையிடமிருந்தும் எவ்வித அறிக்கையும் அரசிற்கு வரப்பெறவில்லை. 19—6—2017 அன்றைய செய்தித்தாளில் இந்தத் துறைமுகத்தின் 100 சதவிகித பங்கினை மத்திய அரசு விலக்கிக்கொள்வதாக செய்திகள் வெளியாகி உள்ளன. மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகத்திலிருந்து இப்பொருள் சம்பந்தமான விவர அறிக்கையினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அறிக்கை கேட்டு, நடவடிக்கை எடுக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார். (குறுக்கீடு) விடுங்கள், பிறகு பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) 2017—2018 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை. (குறுக்கீடு)*

(இ) ஆர்.கே. நகர் தொகுதி, மீன்பிடி துறைமுகம், மீன் விற்கும் நவீன வளாகத்திற்கு பாதுகாப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P. வெற்றிவேல், நீங்கள் ஏதோ raise செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள். மீனவர் பிரச்சினை என்று சொன்னீர்கள். சுருக்கமாகச் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*